# முரசொலி

கலைவாணர் நினைவு இதழ்



# உள்ளத்தில் சிலையானார்!

நீட்டோலை



அன்புள்ள பொன்முடி,

நாடெங்கும் கல கலவென ஒலித்து நம்மை யெல்லாம் தெவிட்டாத இன்பத்திலாழ்த்திய நகை முழக்கம் நின்று ஓராண்டாகி விட்டது!

நாடகத்தில், திரைப்படத்தில், மேடைகளில் கருத்து மணங் கமழச் செய்த கலைவாணர் இன்று நம்மிடையே இல்லை!

"இல்லை" யென்போர்க்கு அள்ளிக் கொடுத்த கைகள்—இன்னா செய்தார்க்கும் இனியதே செய்யும் பேருள்ளம்—இந்தத் தலைமுறைக்குப் பெரு நடிகர்—அவரை இழந்தோம்.

அவரது நினைவு நாள் இன்று!

குறிப்பிட்ட இந்த ஒருநாள் தானா அவரை நாம் நினைக்கின்ற நாள்? அல்ல; அல்ல! என்றென்றும் மனதை விட்டு மறையாத மாணிக்கம் அவர். ஆனால் இந்த நாள் அவர் தன் உலக நடமாட்டங்களை ஒருவழியாக முடித்துக் கொண்ட நாள்.

மனிதன் பிறக்கிறான்—அவன் பிறக்கும்போது தாய், தந்தை, குடும்பத்தார், நெருங்கிய உறவினர் மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆனால் அந்த மனிதன் சாகும்போது ஒரு அதிசயத்தைச் செய்து விடுகிறான். நாட்டு மக்கள் அனைவரையும் கண்ணீர் வடிக்கச் செய்வதுதான் அது! பிறக்கும்போது பிறரை மகிழச் செய்து விடுவதில் எல்லா மனிதர்களும் வெற்றி பெறுகிறார்கள். ஆனால் சாகும்போது ஞாலத்தை அழுதிடச் செய்வதில் எல்லா மனிதர்களும் ஜெயிக்கிறார்களா என்றால்—இல்லை யென்றுதான் சொல்ல வேண்டும். அப்படி இரண்டிலும் வெற்றி முரசு கொட்டியவர்கள் வெகு சிலரே—அந்தச் சிலரில் ஒருவர் நமது நகைச்சுவையரசர்.

பிறக்கும்போது ஒருவனால் இந்த நாட்டுக்கு லாபம் உண்டா—என்று யாரும் கூறி விடமுடியாது. அவன் இறந்தபோது எவ்வளவு நஷ்டம் என்று எண்ணிப் பார்த்திட முடிகிறது. அதனால்தான் பெரியவர்களின் மறைந்த நாட்களை நினைவு நாட்களாக நாம் கருதுகிறோம். அவர்களுக்கு நாம் செலுத்த வேண்டிய மரியாதையைச் செலுத்துகிறோம். அவர்கள் வழி நின்று பணிபுரிவோம் என உறுதியெடுத்துக் கொள்கிறோம்.

"அம்மவோ! இந்த நாளில் தானே நமது மதிப்பிற்குரியவர் நம்மை விட்டுப் பிரிந்தார். மாபெரும் கலைமேதையின் மறைவு இந்நாளில் நடைபெற்ற நிகழ்ச்சிதானே..." என எண்ணிப் பெருமூச்சு விடவும் அவரது திருஉருவை நீர் மல்கிய கண்களோடு வணங்கிடவும் அவரது புகழுக்கு மேலும் அணி சேர்க்கவும் பயன் படுகிற நாளே 'நினைவு நாள்'!

★ மு. கருணாநிதி ★

அந்த நினைவு நாளை—அதுவும் முதலாண்டு நினைவு நாளை—அவரது குடும்பத்தாரே கொண்டாடுகிறார்கள்—ஆமாம் நண்பா, அவரது குடும்பத்தாரே கொண்டாடுகிறார்கள்! அழைப்பு வந்திருக்கிறது அனைவருக்கும்!

அதைப் பார்க்கும்போதும், படிக்கும்போதும் கண்கள் குளமாகி, நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறது. முத்துக்கோவையெனப் பல்வரிசை காட்டி, சத்துள்ள நகைச் செல்வம் நாட்டுக்கு வழங்கிய நடிப்புலகத் தலைமகனார் நம்மை நோக்கிப் பேசுவது போலிருக்கிறது, பொன்முடி!

"நான்தான் என். எஸ். கிருஷ்ணன்! என்னைத் தெரிகிறதா உங்களுக்கு? அதற்குள் மறந்துவிட்டீர்களா? அய்யோடா — என்ன ஆச்சரியம்? ஓ, மறக்கவில்லையா? சும்மா சொன்னீர்களா? நான் உங்களால் கலைவாணன் என்று அழைக்கப்படுகிறேன். ஆனால் என் வாழ்க்கை வரலாற்றை அரும்பிலேயிருந்து கவனிப்பீர்களேயானால் எத்தனை எத்தனை இடர்பாடுகளைத் தாண்டி, எவ்வளவு எதிர்ப்புகளை சமாளித்து, காட்டாறு, கல், முள், கரடி, காண்டாமிருகம், கர்ச்சிக்கும் சிங்கம், புலி—இப்படிப் பல தொல்லைகளை சிரித்துக் கொண்டே தோற்கடித்து—இன்று உங்கள் நேசத்திற்கும் பாசத்திற்கும் உரியவனாகியிருக்கிறேன் என்பது புரியும். ஒருவனது வாழ்க்கை இன்னொரு மனிதனுக்குப் பாடம்—அப்படி நான் ஒரு பாடமாகி விட்டேன் என்பதை நான் எண்ணி மகிழ்கிறேனே; அதுவே எனக்குப் பெரும் ஆறுதல்—பெருமை—புகழ்—எல்லாமே!"

—இது போலத்தான் கூறுகிறது அந்த அழகிய படம்.

அவர் புகுந்த பிறகு கலையுலகில் புதிய களை பிறந்தது. பொலிவு எழுந்தது — வலிவு மிகுந்தது.

அன்னாடம் அரும்புகின்ற எண்ணங்கள் அத்தனையும் அவரது ஒளிபட்டு மலர்ந்தன!

குஞ்சுகளைப் பாதுகாக்கும் பெட்டைபோல் நடிகர்களைத் தன் வள்ளல்தன்மை மிகுந்த கரங்களால் அணைத்துப் பாதுகாத்தார்!

- எத்தனையோ ஆதிதிராவிடர் வீதிகள் அவரது கருணையால் எழில் பெற்றிருக்கின்றன. அங்கெல்லாம் கிருஷ்ணன், "நந்தனாரா"க வணங்கப்படுகிறார்.
- கணக்கில்லாக் கல்வி நிலையங்கள் கலைவாணர் கரம் பட்டுத்தழைத்திருக்கின்றன. அங்கெல்லாம் அவர் "மெய் கண்டாராக"த் திகழ்கிறார்.
- பொது வாழ்வில், தன் சுக துக்கங்களை மறந்து அவர் ஆற்றிய பணி தமிழகம் உள்ளளவும் மறத்தற்குரியதன்று! அதில் அவர் ஓர் "நல்ல தம்பி"!
- "சிந்தை ஒடிக்கும் செய்திகளைக்கூட சிரித்த முகத்தோடு தாங்கிக் கொண்டு செயல் புரிகிறாரே; சரியான பைத்தியக்காரன்!" எனச் சிலர் வர்ணித்ததுண்டு!

அதையும் ரசித்து அவர்களைப் பாராட்டி மகிழ்ந்தார். அதனாலே அவர் உத்தமரானார். உயர்ந்தவரானார். சிரிப்புக்குப் புது இலக்கணம் தீட்டிய கலையுலகத் தொல்காப்பியரானார்.

அறிவியக்கத்து வாடை சரியாகப் பரவாத நேரம்—பரப்பிடும் பகுத்தறிவாளர்கள் கல், மண், கம்பு வீச்சு, கத்திக்குத்து முதலியவைகளைப் பரிசாகப் பெற்ற சமயம் அந்தக் காலத்தில் துணிவோடு நாடக மேடை

[தொடர்ச்சி பக்கம்—7]



அறிஞர் அண்ணா அவர்களின் படத்தை கலைவாணர் திறந்துவைக்கிறார்.
கலைவாணர் கலந்து கொண்ட இந்தக் கடைசி பொது நிகழ்ச்சி, 9—8—57 அன்று தாரமங்கலம் (சேலம் மாவட்டம்) ஊராட்சி மன்றத்தில் நடைபெற்றது.




வெள்ளி 29—8—58 சென்னை

# பஞ்சமோ பஞ்சம்!

இது ஒரு 'சேமநல நாடு'—என்று கூறப்படுகிறது.

நாடாள்வோர் நகர்த்தும் ஒவ்வொரு பகடையும் அந்த குறிக்கோளை நோக்கித்தான்—என்று விளம்பரப்படுத்தப்படுகிறது.

ஆனால் ஆராய்ந்து பார்த்தால் ஆட்சிபீடத்திலிருப்போர் சரிவர அந்தப் பின்னணியைப் புரிந்து கொண்டு பணியாற்றுவதாகத் தெரியவில்லை.

அதைப்போலவேதான் வெளிநாட்டுச் செலாவணி வெகுவாகக் குறைந்து விட்டதாகக் கூறுகிறார்கள்.

அதனால் சில வகுப்பினரால் அத்யாவசியமான பொருள்கள் என்று கருதப்படுபவைகள்கூட இறக்குமதித் தடைக்கு ஆளாகியிருக்கின்றன.

பிலிம் கட்டுப்பாட்டினால் நாட்டின் முக்கியமான படத்தொழிலே நசித்து விடும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஒருசமயம் பாராளுமன்றத்தில், ''நான் இந்தியாவில் தயாராகும் பிளேடுகளை உபயோகித்து என்னுடைய முகத்தைக் காயப் படுத்திக் கொள்ள விரும்பவில்லை'' என்று மொரார்ஜி தேசாய் கூறினார். ஆனால் இன்றோ அந்த பிளேடு இறக்குமதியும் கட்டுப்பாடு என்னும் பேரிடிக்கு ஆளாகியிருக்கிறது.

இவ்வளவு கடுமையாக வெளிநாட்டுச் செலாவணியைக் காப்பாற்றப் புறப்பட்டிருப்பவர்கள் எல்லா விதத்திலும்; ஆடம்பரப் பொருள்கள் அனைத்தையும் இறக்குமதிக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

ஆனால் சென்ற வாரம் சென்னை அமெரிக்கச் செய்தி இலாக்கா ஏற்பாடு செய்த விசேஷப் படக் காட்சிக்கு வந்திருந்த மாஜி அமைச்சர் கே. சந்தானம் அவர்கள் ''விரைவில் இந்தியாவில் 'டெலிவிஷன்' ஏற்பாடு செய்யப்படும்''—என்று கூறியிருக்கிறார்.

அதன்படி முதல் டெலிவிஷன் நிலையம் வழக்கம்போல் வட இந்தியாவில் டெல்லியில் நிறுவப்படுமென்றும்; அது அடுத்த ஆண்டின் இறுதியில் பணியாற்றத் துவங்கும் என்றும் கூறியிருக்கிறார்.

டெலிவிஷன் இருப்பதால் எங்கள் நாட்டிலும் டெலிவிஷன் இருக்கிறது—என்று நமது அமைச்சர்கள் வெளிநாடு செல்லும் போது பெருமையாகக் கூறிக் கொள்ளலாமே தவிர; அதனால் ஏழைப் பாமர மக்களுக்கு எள்ளளவு நன்மையும் கிடையாது.

அத்யாவசியப் பொருள்கள் பலவற்றுக்குக் கட்டுப்பாடு விதிப்பவர்கள் இதுபோன்ற ஆடம்பரப் பொருள்களை அவசியமின்றி அனுமதிப்பதேன்?

—எவை உடனடியாகத் தேவைப்படுவன? எவை அப்படித் தேவைப்படாதன?—என்பதிலே யாருக்கும் நல்ல தெளிவில்லாததால்; அந்தச் சிறு தவறிற்குப் பொதுமக்கள் தண்டனையடைய வேண்டிய பரிதாபமான நிலை பிறந்திருக்கிறது.

பொதுமக்கள் உயிர் பெரிதாக மதிக்கப்படும் நாட்டில்தான் நல்ல அரசாங்கம் இயங்க முடியும்.

மனித உயிர் எப்படி உதாசீனப்படுத்தப்படுகிறது என்பதற்கு இந்தக் 'காங்கிரஸ் பிரபுக்கள்' ஆட்சியின் தலைநகரமான டெல்லியே நல்ல உதாரணமாக விளங்குகிறது.

வழக்கம்போல் நிலவி வந்த தண்ணீர்ப் பஞ்சம் அங்கு சென்ற கிழமை உச்ச நிலைமை அடைந்து விட்டதாம்.

குளிப்பதற்கு; முகச் சவரம் செய்து கொள்வதற்கு; ஏன்—வாய் கொப்பளிப்பதற்குக்கூடத் தண்ணீர் கிடைக்கவில்லையாம்.

'பீரினால் வாய் கொப்பளித்தவர்களையும்; சோடாவினால் முகம் கழுவிக் கொண்டவர்களையும் எனக்குத் தெரியும்'—என்று கே. ஏ. அப்பாஸ் 'பிளிட்ஸ்' ஏட்டிலே எழுதியிருக்கிறார்.

தாகமெடுத்த குழந்தைகளுக்குத் தண்ணீர் தர முடியாத காரணத்தால் பள்ளிக்கூடங்கள்கூட மூடப்பட்டனவாம்.

'ரேடியேட்டரு'க்குத் தண்ணீர் ஊற்ற முடியாத காரணத்தால் பல கார்கள் நகர முடியவில்லையாம்.

இந்த நிலையில் 'குடிப்பதற்கு முன்பு தண்ணீரைக் கொதிக்க வைக்கவும்'—என்று ரேடியோ பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்ததாம்.

'எதைக் கொதிக்க வைப்பது? அதற்குத்தான் தண்ணீரே கிடைக்கவில்லையே!'—என்று பொதுமக்கள் பேசிக்கொண்டார்களாம்.

சுகாதார அமைச்சரின் கீழ், சுத்தமான நீர் பொதுமக்களுக்குக் கிடைப்பதைக் கவனிக்க அமைப்பு ஒன்று இருக்கிறது.

அப்படி இருந்தும் வெட்கமின்றி; தண்ணீரைக் கொதிக்க வைத்துக் குடிக்கவும்—என்று ரேடியோ அறிவித்திருக்கிறது.

அந்த சுகாதார இலாக்காவின் கவனக்குறைவு காரணமாக இரண்டாண்டுகளுக்கு முன்பு டில்லியிலே 'மஞ்சக்காமாலை' வியாதி தலைவிரித்தாடியதை யாரும் மறந்திருக்க முடியாது.

இரண்டாண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட அதே தவறு இன்று மீண்டும் டில்லியிலே ஏற்பட்டிருக்கிறது.

இதுபோன்ற கவனக்குறைவு 'சேமநல நாடு' என்பதற்கான முழுப்பொருளையும் உணர்ந்துகொண்ட வேறு நாடுகளில் ஏற்பட்டிருந்தால் அதன் விளைவுகளே வேறு மாதிரியாக இருந்திருக்கும்.

உதாரணமாக, சில ஆண்டுகளுக்கு முன்பு லண்டன் நகரத்திலே இருவர் 'டைபாய்டு' காய்ச்சலினால் இறந்தார்கள்.

பிறகு தண்ணீர்க் குழாய் சுகாதார மற்ற முறையில் இருந்ததுதான் அந்த டைபாய்டு கிருமிகளைப் பரப்பியதற்குக் காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டது.

அதன் விளைவாக லண்டன் நகரசபை தனது ஒழுங்கீனத்தையும், கவனக்குறைவையும் ஒப்புக்கொண்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு பல ஆயிரம் பவுன்களை நஷ்டஈடாகக் கொடுக்கும் நிலைமை ஏற்பட்டது.

—இங்கிலாந்தைப்போல் இங்கும் மனித உயிர்களுக்கு மதிப்பு இருந்தால், நஷ்டஈடு கொடுத்துக் கொடுத்து இந்திய அரசாங்கமே இந்நேரம் ஓட்டாண்டியாகியிருக்கும்!

இதுபோன்ற கவனக்குறைவு காரணமாக வியாதியால் விழும் பிணங்கள்; போலீஸ் தடியடி—துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக விழும் பிணங்கள்; அடிக்கடி நிகழும் ரயில் விபத்து காரணமாக விழும் பிணங்கள்—இவைகளையெல்லாம் கணக்கெடுத்தால் இங்கு நடப்பதை 'சேமநல நாடு' என்று யாரும் சொல்லமாட்டார்கள்.

'சேமநல நாடு'—இந்தத் தத்துவம் பேச்சாலும் எழுத்தாலும் ஏற்பட்டுவிடாது; செயலால்தான் ஏற்படமுடியும் என்பதை பதவியிலிருப்போர் பிரசங்கமாரி பொழிவதற்கு முன் உணர்ந்து பார்க்க வேண்டும்.

பெங்களூரில்
**கலைவாணர் நினைவுநாள்**
புரவி நாட்டிய நிபுணர் நடத்துகிறார்.
★
பெங்களூர் புரவி நாட்டிய நிபுணர்
சுந்தரமூர்த்தி அவர்கள்
நடத்தும்
கலைவாணர் நினைவுநாள்
31-8-58 ஞாயிறன்று
என். எஸ். கே. மதுரம் அவர்கள்
தலைமையில் நடைபெறும்
அவ்வமயம் கலைவாணர் வாழ்க்கைபற்றி சுந்தரமூர்த்தி குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் உண்டு.
இங்ஙனம்,
சுந்தர் புரவி நாட்டிய கலா மன்றம்,
டாஸ்கர் டவுன், பெங்களூர்—1.






பொன்மணியை சந்தைக்கு அனுப்பி விட்டுப் பூஞ்சோலையம்மாள் கணவனைக் கவலையோடு கவனிக்க ஆரம்பித்தாள். இரண்டு நாட்களாகவே இருமலும் இழுப்பும் அதிகமாகி விட்டது பொன்னையாவுக்கு. இரவு போன உயிர் திரும்பி வந்தது என்று கூறுமளவுக்கு இருமல் அதிகமாகி, உடனடியாக மருத்துவர் வரவழைக்கப்பட்டு சிகிச்சைகள் செய்த பிறகே பூஞ்சோலைக்கு சிறிது துயரம் குறைந்தது.

காலையில் எப்போதும்போல் கலகலப்பாகவே பேசிக்கொண்டிருந்தார் பொன்னையா. பொன்மணி, சந்தையிலே கிடைக்கிற பணத்தைக் கொண்டு வைத்தியர் கூறிய மருந்துப் பொருள்களை வாங்கி வருவாள் என்று இருவருமே நிம்மதியாக இருந்தனர்.

"சந்தைக்குப் போய் விட்டு வருகிறேனப்பா!" என்று பொன்மணி விடை பெற்றுக் கொண்ட போதுகூட அவர் தெம்பாகத்தான் காணப்பட்டார்.

அவள் வீட்டை விட்டுப் புறப்பட்டு சிறிது நேரத்திற்கெல்லாம் வானம் கருத்திட ஆரம்பித்தது. பொன்னையாவின் முகமும் கருத்திடத் தொடங்கியது. கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து கொண்டு பூஞ்சோலையிடம் பேசிக் கொண்டிருந்த பொன்னையா இடையிடையே நெஞ்சில் கை வைத்துப் பார்த்துக் கொண்டார்.

பூஞ்சோலை, பயத்தோடு "என்ன நெஞ்சிலே அடிக்கடி கைவச்சுப் பாக்கிறீங்க?" என்று கேட்டாள்.

"நெஞ்சாவது ஒண்ணாவது— அது எங்கே இருக்கு? அதைத் தான் கல்யாணம் ஆனவுடனே உனக்கிட்ட கொடுத்துட்டேனே!" என்று சிரித்துக் கொண்டே பதில் சொன்னார் பொன்னையா.

தன் கணவன் அடிக்கடி இதுபோலக் குறும்பாகப் பேசுவார் என்றாலும் வயதான பிறகு இப்படியெல்லாம் பேசுவதில்லை. இப்போது திடீரென்று இளமை திரும்பி விட்டதேயென்று வியப்பும் மகிழ்ச்சியுமடைந்தாள் பூஞ்சோலை.

அவளது மனத் திரையில் இளமைக் கால நினைவுகள் படக்காட்சிபோல ஓடிக்கொண்டிருந்தன. மாப்பிள்ளை வீட்டார் தன்னைப் பெண் பார்க்க வந்ததும்—அவர்களோடு வந்திருந்த மணமகன் பொன்னையா, கொல்லைப்புறத்து சுவர் மறைவில் ஒளிந்து கொண்டு தன்னைப் பார்ப்பதற்கு முயற்சித்ததும்—அதைத் தான் பார்த்து துள்ளிக் குதித்து வீட்டுக்குள் நுழைந்து கொண்டதும்—மணமன்றத்தில் இருவரும் எதிர்காலத்தை எண்ணியவாறு ஒருவர் முகத்தை ஒருவர் யாரும் பார்க்காத நேரத்தில் பார்த்துக் கொண்டு புன்னகை புரிந்ததும்—முதல் நாள் பள்ளியறையில் யார் முதலில் பேசுவது என்று திகைத்துத் தடுமாறியதும்—போகப் போக இருவரும் ஓய்வு ஒழிச்சலின்றிப் பேசிப் பேசி சரியான வாயாடிகள் என்று பெயரெடுத்ததும்—சில வருடங்களில் இருவரும் பெற்றோராகி விடவே குடும்பப் பொறுப்பு முழுதும் தலையில் வந்து விழுந்ததும்—அந்தப் பொறுப்பினால் இயல்பாகவே அவர்களிடம் அடக்கமான பண்பு குடி கொண்டதும்—இப்படிப் படிப்படியாக பல மாற்றங்கள் பூஞ்சோலையின் நினைவிலே புரண்டு அவள் விழிகளை நீர்வீழ்ச்சிகளாக்கின. அதைக் காட்டிக் கொள்ளாமல் கணவனின் மார்பகத்தைத் தடவிக் கொடுத்தாள்.

பொன்னையா, தன் அன்பு மனையாளை வைத்த விழி வாங்காமல் கவனித்தார்.

"என்ன அப்படிப் பார்க்கிறீங்க? ஏன்?" என்று நடுக்கத்தோடு அவர் உடலை அசைத்தாள் அவள்.

"ஒன்றுமில்லை! உன்னைப் பார்த்துக் கொண்டேயிருக்கணும் போலிருக்கு!" —பொன்னையா தழு தழுத்த குரலில் பேசினார். அவர் கண்களும் கலங்கியிருந்தன.

"பூஞ்சோலை! எனக்கு ஒரே கவலை. நம்ப பொன்மணிக்கு ஒரு கல்யாணம் செய்து பார்த்து விடணும்னு ரொம்ப நாளா ஆசையை மனசிலே வச்சிகிட்டு மங்குகிறேன். சீக்கிரம் நடக்காதுன்னுதான் எனக்குப் படுது!"

"எல்லாம் நேரம் வந்தால், தானே முடியும். நீங்கள் நிம்மதியா இருங்க!"

"நேரமாவது ஒண்ணாவது— நான் கண் மூடுவதற்குள் அந்த நேரம் வரவா போகுது?"

இடியும் மழையும் காற்றும் பொன்னையாவின் வியாதியை மிகவும் அதிகப்படுத்திவிட்டன போலும். பேசிக் கொண்டே இருந்தவர் பலமாக இருமிட ஆரம்பித்தார்.

"பொன்மணி, இப்ப வந்துடுமா?"

"இந்த சுருளிமலை எங்கே?"

—பொன்னையா மிகவும் ஆவலுடன் கேட்டார். மழை தாங்க முடியாமல் பொழிந்தது. மின்னல்—இடி—காற்று — அவைகளோடு அவரது இருமலும் சேர்ந்து கொண்டது.

"அப்பாடி! நெஞ்சை வலிக்கிராப்ல இருக்கு!" என்று பூஞ்சோலையின்மீது சாய்ந்து கொண்டார்.

அவளுக்கும் பெரிய அதிர்ச்சி! "ஐயோ! என்ன சொல்றீங்க?" பூஞ்சோலையின் நாக் குழறிற்று. ஆயினும் தைரியத்தைக் கை விடவில்லை. அடுக்களைக்கு ஓடி, வெந்நீர் தயாரித்து, அதைக் கணவனது நெஞ்சில் ஒத்தடம் கொடுக்க ஆரம்பித்தாள்.

பொன்னையாவுக்கு வலி பொறுக்க முடியவில்லை. அதிகமாக முனகினார். "அய்யோ, தாங்கவில்லையே!" என்று கதறினார். வீட்டிலோ வேறு யாருமில்லை. பொன்மணி இந்த மழையில் எப்படித் திரும்பி வருவாளோ? சுருளிமலை எங்கே போய் விட்டானோ? பூஞ்சோலையின் மனம் தத்தளித்தது. மாங்கல்யத்தை எடுத்துக் கண்களில் ஒத்திக் கொண்டாள். "கடவுளே! என் மஞ்சள் குங்குமத்தைக் காப்பாற்று!" எனப் பிரார்த்தனை செய்தாள்.

பொன்னையாவுக்கு நெஞ்சு வலி தந்த வேதனையைவிட அதிகமான கஷ்டம் பூஞ்சோலையின் முகத்தைப் பார்க்கும் போது ஏற்பட்டது. திடீரெனத் தான் இறந்துவிடுவோமோ என்று ஐயமும் தோன்றியது. அவர் கவலைப்பட்டதெல்லாம் சாவதைப் பற்றியல்ல. தான் செத்துப் போன பிறகு தன் மனைவியும் மக்களும் சோக உருவங்களாகி விடுவார்களே—பின் அவர்களை ஆற்றுவாரில்லை; தேற்றுவாரில்லை யென்னும் நிலைமை ஏற்பட்டு விடுமோ—என்ற கவலைதான் அவரை ஆட்டிப் படைத்தது.

பூஞ்சோலை, பூவோடும் மஞ்சளோடும் நிறை சுமங்கலியாக காட்சி தருகிறாள். அவள் இல்லாமல் எந்த வீட்டிலும் அந்த ஊரில் நல்லது கெட்டது நடப்பதில்லை. கல்யாண வீடுகளில் மாப்பிள்ளை பெண்ணுக்கு ஆரத்தி எடுப்பதற்கு பூஞ்சோலை வந்தாக வேண்டும். பிறந்த குழந்தைகளை முதலில் பூஞ்சோலையின் மடியில்தான் படுக்க வைக்க வேண்டும். எங்கேயாவது முக்கியமான காரியமாகப் புறப்பட்டால் அப்படிப் புறப்படுகிறவர்கள் தங்கள் லட்சிய சித்திக்காக "எதிரே நல்ல சகுனம் எதுவும் வராதா? பூஞ்சோலை வரமாட்டாளா?" என்று ஏங்கித் தவிப்பார்கள்.

இப்படியொரு "மகராசி"யின் முகராசியை அந்த ஊரார் பரிபூரணமாக மதிக்கிறார்கள். இவ்வளவும் எதனால்? மஞ்சள் குங்கும மகிமையினால்!

கலைவாணர் நினைவு நாள்
பொதுக்கூட்டம்
★
30-8-58 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு
குளித்தலை திரு. வி. க. திடலில்
தோழர் முத்துகிருட்டினன் தலைமையில்
மு. கருணாநிதி
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
பேசுவார்கள்.
—தி. மு. கழகம், குளித்தலை.

அது அழிந்து விட்டால் பூஞ்சோலைக்கு மதிப்பு இருக்காது. நல்ல காரியங்களுக்கு அவள் குறுக்கிடே கூடாது என்கிற அளவுக்கு அவள் புறக்கணிக்கப்பட்டு விடுவாள். விதவைச் சகுனம் விஷச் சகுனம் என்று ஆகிவிடும். பூஞ்சோலை மூலையில் முடங்கி விடுவாள்.

அவளுக்கு அப்படியொரு அவமதிப்பு வராமல் இருப்பதற்காகவாவது தான் சாகாமல் இருக்க வேண்டும் என்று பொன்னையா தனக்குத் தானே சொல்லிக் கொண்டார். அப்போது அவர் இருதயத்தின் அழுகை சப்தம் பூஞ்சோலையின் காதில் விழவில்லை. அவள் நினைவு முழுவதும் ஆண்டவனிடம் சென்றிருந்தது. பூமியை உருத் தெரியாமல் கரைத்து விடக் கங்கணம் கட்டிக் கொண்டதுபோல் பெய்து கொண்டிருந்த மழையையும் அவள் பொருட்படுத்தவில்லை. மருத்துவரை அழைப்பதற்குப் புறப்பட்டாள்.

“வேண்டாம் பூஞ்சோலை! இனி யொன்றும் பிரயோசனப் படாது!” என்றார் பொன்னையா.

“போகும்போதே தட்டாதீர்கள்—இதோ ஒரு நொடியில் மருத்துவரை அழைத்து வருகிறேன்!”

“மருத்துவரையும் மீறிவிட்டது—இன்னும் சிறிது நேரந்தான். அதற்குப் பிறகு...?”

“ஐயோ, அப்படியெல்லாம் சொல்லாதீங்க!”

பூஞ்சோலை தன் கணவனின் காலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

“வைத்தியரைக் கூப்பிட நீயும் போய்விட்டால்......நான் தனியாக் கிடந்து உயிர் விடணுமா?”

இதற்குப் பூஞ்சோலையால் பதில் கூற முடியவில்லை. கதறிக் கதறி அழுதாள். துடித்தாள். தவித்தாள். தனக்குத் தெரிந்த மருத்துவங்களை யெல்லாம் செய்து பார்த்தாள். வலி அதிகமாகிக் கொண்டே போனது. பூஞ்சோலைக்கு ஒன்றுமே புரியவில்லை. பொன்னையா மெதுவாகப் பேசினார்.

“வேண்டுமானால் போய் வைத்தியரை அழைத்து வா. உன் ஆசையை ஏன் கெடுப்பானேன்?”

பூஞ்சோலை புறப்பட்டாள்; புயலிலும் மழையிலும் பயமின்றிப் போகும் துணிவு கொண்டாள். அவளை அழைத்து, பொன்னையா தன் படுக்கையின் அடியில் தலையணை ஓரமாக ஒளித்து வைத்திருந்த ஒரு மூடப்பட்ட காகித உரையைக் கொடுத்து “இதைப் படித்துப் பார்த்து இதன்படி நடந்து கொள்ளுங்கள்” என்று கண்டிப்பும் கனிவும் கலந்த குரலில் கூறினார். காகித உரையைப் பூஞ்சோலை மடியில் வைத்துக் கொண்டு, மருத்துவர் வீட்டுக்குப் புறப்பட்டாள்.

பொன்னையாவோ “ஆ” என அலறினார். நெஞ்சைப் பிடித்துக் கொண்டார், மயக்கமுற்றுக் கீழே விழுந்தார். அவர் வாயிலேயிருந்து ரத்தம் வழிந்தது. தூக்கி உட்கார வைத்தாள். அவரால் பேச முடியவில்லை அதிகமாக! பூஞ்சோலையின் மடிமீது சாய்ந்து கொண்டார். பூஞ்சோலை, இனியும் தாமதிக்கக் கூடாதென்று வெளியே ஓடினாள் மருத்துவர் வீடு நோக்கி!

* * *

ஒரு பக்கத்தில் பூஞ்சோலை மழையில் ஓடிக் கொண்டிருக்கிறாள். இன்னொரு பக்கத்தில் பொன்மணியும் அறவாழியும் எதிரே வந்து கொண்டிருக்கிறார்கள். மழையில் இளைஞர்களைப் போல ஓடியாடி அறவாழியும் பொன்மணியும் வீடு நோக்கி வருவதைப் பூஞ்சோலை பார்க்கவில்லை. அவர்களும் அவளைப் பார்க்கவில்லை. “அப்பாடா; தப்பினோம்” என்று கூறிக் கொண்டே மழையை வாழ்த்தியவாறு சற்று வேகமாக நடந்தார்கள்.

வீட்டுக்குள்ளே நனைந்துவிட்ட ஆடைகளுடன் பொன்மணி அடியெடுத்து வைத்தாள். அறவாழி வெளியிலேயே நின்று கொண்டான். அவனையும் பொன்மணி உள்ளே வலிய அழைத்துச் சென்றாள். வீட்டுக்குள்ளே யார் நடமாட்டமும் இல்லை. சுற்று முற்றும் பார்த்தாள்.

“அம்மா! அம்மா!!”

—பதில் இல்லை.

கயிற்றுக் கட்டில் பக்கம் சென்றாள்.

“அப்பா தூங்குகிறார் — எழுப்ப வேண்டுமா? வேண்டாம்!”

இறுதியில் ஒருமுடிவுக்கு வருகிறாள்; எழுப்பியே விடுவதென்று!

“அப்பா! அப்பா!!”

—பதில் இல்லை.

ஏதோ, ஒரு சந்தேகம்—அப்பாவைத் தொட்டுப் பார்க்கிறாள். உடம்பு ‘ஜில்’விட்டுப் போயிருக்கிறது. மூச்சு நின்று வெகு நேரமாகிறது!

தாய், மருத்துவரை அழைத்துக் கொண்டு வேக வேகமாக உள்ளே ஓடி வருகிறாள். வந்த வேகத்தில் நிலைப்படி தட்டி விடுகிறது. அப்படியே கீழே விழுகிறாள். சரியான அடி! நினைவு இல்லை! இவைகளையெல்லாம் காணாமல் அந்தக் குடும்பத்துத் தலைவன் நிம்மதியாகக் கண்களை மூடிக்கொள்கிறான்!





முத்தமிழ் இலக்கிய
சித்திரச் செல்வம் -

## முத்தாரம்

### வருகின்ற இதழில்...

### சிலப்பதிகாரத்திற் சுவை

* இளங்கோ படைத்த சிலம்புக் காவியத்தின் மாணிக்கப் பரல்கள் சிலவற்றைத் தொகுத்துத் தருகிறார், டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள்

### அணுவின் காதல்

* காதல் இலக்கணத்திற்குப் புதிய தத்துவ விளக்கம்—பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்களின் தொடர் கட்டுரையின் முதல் பகுதி!

### பிழைகள் மலிந்த பள்ளி இறுதிப் பாடநூல்

* அரசியலார் வெளியிட்டிருக்கும் 1959—ம் ஆண்டு பள்ளி இறுதித் தேர்வுப் பாடநூலில் மலிந்து கிடக்கும் பிழைகளை எடுத்துக் காட்டித் திருத்தம் தரும் நீண்ட கட்டுரை—புலவர் குழந்தை எழுதுகிறார்.

### குவென்டின் டர்வர்ட்

* சர். வால்டர் ஸ்காட்டின் பள்ளி இறுதித் தேர்வுக்கான (1959) ஆங்கிலத் துணை நூலை மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி தமிழில் சுருக்கித் தருகிறார் சு. கல்யாணம் எம். ஏ., பி. டி., அவர்கள்.

மற்றும்

நாஞ்சில் கி. மனோகரன் எம். ஏ., நா. பாண்டுரங்கன் எம். ஏ.,
இரே. இளம்வழுதி எம். ஏ., பி. எல்—ஆகியோரின்
கருத்தோவியங்களுடன்

ஆசிரியர் மு. க.வின்

கவிதை நடைச் சிறுகதையும் உண்டு.


## உங்கள் பார்வை!

அன்புள்ள ஆசிரியருக்கு,
வணக்கம்.

சென்ற வாரம் உடல் நலக் குறைவாக சென்னைக்கு வந்து ஒரு வாரம் தங்கி சிகிச்சை பெற்றேன். ஊருக்குத் திரும்பிச் சென்ற எனக்கு ஓய்வு தேவை என்றெண்ணிய எனது நண்பர் தனது வானொலிப் பெட்டி ஒன்றை எனது தனி அறையில் கொண்டு வந்து பொருத்தி விட்டார்.

வானொலியில் 18—8—58 இரவு, சுமார் 9 மணிக்குமேல், ஐந்தாண்டு திட்டம்பற்றி ஒரு புலவர் பாட்டாகவும், வசனமாகவும் இந்த அரசியலாரின் திறமையைப் புகழ்ந்தார்! எனக்கு ‘பகீர்’ என்றது. வடநாட்டில் சித்தரஞ்சன். சிந்திரி போன்ற கோடிக் கணக்கான முதல் போட்டு ஆயிரமாயிரம் தொழிலாளர்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகளைப்பற்றி கம்பீரமாகக் கூறும் பாடகர், “தமிழ் நாட்டில் சாத்தனூர், மணிமுத்தாறு போன்ற பல ஆயிரம் திட்டங்களும், ஐாயிரத்துக்கு மேற்பட்ட முதியோர் கல்விப் பாடசாலைகளும் உண்டு! அதற்கு லட்சக் கணக்கான ரூபாய் செலவாகி யிருக்கிறது!” என்று முடித்தார்.

தமிழ் நாட்டில் உரத் தொழிற்சாலை ஏற்படுத்த பணமில்லையாம் அங்கு. ஆனால் சிந்திரி ஆலையை வளர்ச்சி செய்ய மேலும் 18 கோடியாம்! எனக்கு வானொலிப் பெட்டியை உடைத்துப் போடலாமா என்ற எண்ணம் உண்டாயிற்று. அதுதான் எனது நண்பருடையதாயிற்றே! மேற்கண்ட நிகழ்ச்சியை பஞ்சாயத்து போர்டு பூங்காவில் கேட்கும் பாமர விவசாயிகள் என்ன நினைப்பார்கள்?

இந்த அரசாங்கம் வானொலியில் பிரச்சாரம்—சினிமாவில் பிரச்சாரம் — இப்படி பல முறையில் வரிப் பணத்தை அழித்து வெற்றி பெற்று வீராப்புடன் பேசுகிறது!

வடக்கே-சிந்திரி, சித்தரஞ்சன்! தெற்கே—முதியோர் கல்விப் பாடசாலைகள் ஐயாயிரம்!

தெற்கே—செலவு பல லட்சங்கள்! வடக்கே பல கோடிகள்!

இப்படி ஒலிக்கின்ற வானொலியில் மற்றுமொரு கேவலத்தைக் கேளுங்கள்......சரியாக 12-45 மணிக்கு இந்திப்பாடம் ஆரம்பமாகிவிடுகிறது.

எந்த நிலையங்களைத் திருகினாலும் ‘விவித் பாரதி’ ‘ஹிந்திப் பாடம்’—இப்படி ஹிந்தியை தமிழகத்தில் புகுத்துகிறார்கள்.

இனி, வானொலி நிலையம் என்று அழைப்பதைவிட “காங்கிரசாரின் விளம்பர நிலையம்” என்றுகூறி பெயரை மாற்றினாலும் பொருந்தும் என நினைக்கிறேன்.

இப்படிக்கு,
இர. சு. மணியன்,
[கண்டாச்சிபுரம்]



# மனிதனின் கதை

பி. சி. கணேசன்

## திராவிடம்-நாகரிகத்தின் தொட்டில்

கடிதம் 3

அன்புள்ள மாதவி,

நதியோரங்களில் எல்லாம் நாகரிகம் தோன்றி வளர்ந்ததை சென்ற கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். நைலுக்கும் கங்கைக்கும் கிட்டிய பெருமை காவிரிக்கு இல்லாமல் போய்விடுமோ என்று அச்சம் தெரிவித்துள்ளாய். நைல் நதிக் கரையிலும் கங்கைக் கரையிலும் மனித இனம் தோன்று முன்பே காவிரிக் கரையில் வளமான நாகரிகம் பெற்றதொரு இனம் வாழ்ந்ததற்குச் சரித்திரங்களில் ஏராளமான ஆதாரங்கள் உண்டு. அந்த இனம்தான் திராவிட இனம்; நீயும் நானும் வாழும் தமிழகத்திற்குச் சொந்தமான ஆதி இனம். தமிழகத்தில் மட்டுமல்ல; இமய முதல் குமரி வரையல்ல; குமரியும் தாண்டி — பல்கிப் பெருகி வாழ்ந்த இனம்! குமரி தாண்டிக் கடலல்லவா இருக்கிறது? அங்கே எப்படி மக்கள் வாழ்ந்திருக்க முடியும் என்று ஆச்சரியப் படுகிருய். தென்னகத்தில் பஃறுளி, குமரி என்ற பெயருடைய ஆறுகள் இருந்ததாக ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியதாகக் கருதப்படும் தொல்காப்பியம் கூறுகிறது. இப்பொழுது இந்து மகா சமுத்திரம் உள்ள இடத்தில் லெமூரியா என்ற ஒரு கண்டம் இருந்ததாகவும், அக்கண்டம் மடகாஸ்கரிலிருந்து மலேயாவரையில் வியாபித்து, ஆஃப்ரிக்கா, தென்னகம், ஆஸ்திரேலியா ஆகிய பகுதிகளை இணைத்ததாகவும் கூறப்படுகிறது. பூகோள ஆராய்ச்சிகள் இந்துமகா சமுத்திரம் உள்ள இடத்தில் பூமண்டலம் இருந்ததற்கு ஏராளமான சாட்சியங்கள் கொடுக்கின்றன. தென்னகத்தோடு இணைந்திருந்த இப்பெரிய பூபாகத்தைக் கடல் கொண்டிருக்க வேண்டுமென்று நம்பப்படுகிறது. இந்தப் பாகத்தில் நாற்பது இரவுகளும் நாற்பது பகலும் விடாமல் மழை பெய்ததாகவும், அம் மழையின் விளைவாகக் கடல் பொங்கியெழுந்து அப் பெரிய நிலப் பரப்பை விழுங்கியதாகவும் தொன்மையான ஹீப்ரூ நூற்கள் குறிப்பிடுகின்றன.

கடல்கோளுக்குப் பின் குமரியாறு, நீலத் திரைக்கடல் ஓரத்திலே நின்று நித்தம் தவம் செய் குமரி முனையாயிற்று! ஊழியின் பயங்கரத் தாண்டவத்திற்குப்பின்—தமிழினம்—திராவிட இனம்-குமரிக்கு வடக்கேயுள்ள பகுதியில் குடியேறி வாழத் தொடங்கியது. இந்த இனத்தின் உன்னதமான நாகரிகத்தைத்தான், தொல்காப்பியம் முதலாகவுள்ள தமிழ்ப் பெருஞ் சுவடிகள் இன்னும் பறைசாற்றுகின்றன. ஆகவே, காவிரிக் கரையில் மிகப் புராதனமான நாகரிகம் இருந்தது மட்டுமல்ல; நாகரிகத்தின் பிறப்பிடமாகவே அது இருந்திருக்கிறது என்பதில் நீ பெருமையடையலாம்.

மத்திய தரைக் கடல் பிரதேசங்களில்தான் மனித நாகரிகம் தோன்றியிருக்க வேண்டுமென்பதும், மனித இனமே அங்கிருந்துதான் உலகெங்கும் பரவியிருக்க வேண்டுமென்பதும் சில சரித்திர ஆசிரியர்களின் கருத்து. சர். ஹெரசு ரிஸ்லி போன்ற சரித்திர ஆசிரியர்கள் இக் கூற்றை ஒப்புக் கொள்ளாமல், திராவிட இனம் தென்னகத்தின் ஆதி இனம் என்றும், அவர்கள் வேறெங்கிருந்தும் இங்கு வந்து குடியேறியவர்கள் அல்லவென்றும் கருதுகின்றனர்.

பஞ்சாபிலுள்ள ஹாரப்பா, சிந்துவிலுள்ள மொஹஞ்சதாரோ போன்ற மறைந்த மாநகரங்கள் கண்டுபிடிக்கப்பட்டபின், திராவிட நாகரிகத்தின் விரிவும் சிறப்பும் புதிய விளக்கங்கள் பெறலாயின. இன்றும் சிலர் இந்த நாகரிகம் திராவிட நாகரிகத்தோடு தொடர்புடையதன்று என்று நிலைநிறுத்தச் செய்துவரும் பகீரதப் பிரயத்தனங்கள் நீ அறிந்ததே! வர்ணம் பூசப்பட்ட பானைகளும் கண்ணாடியாலான வளையல்களும், சுட்ட செங்கற்களால் கட்டப்பட்ட வீடுகளும் திராவிட நாகரிகத்தின் சிறப்பியல்புகள் என்று ஹாரப்பா நகரம் எடுத்துரைக்கிறது. சதுரங்கப் பலகைகளும், கல் மோதிரங்களும், உலோகங்களாலான முத்திரைகளும் அந்த மறைந்த மாநகரங்களில் கண்டெடுக்கப் பட்டுள்ளன. அந்த நாகரிகம் உயர்ந்த நாகரிகம் என்பதிருக்கட்டும்; அது திராவிட நாகரிகம்தான் என்ற முடிவுக்கு எப்படி வந்தாய் என்று நீ வினவக்கூடும். திரு. அலெக்சாண்டரே என்ற பெரியார் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர் என்ற இடத்தில் கண்டெடுத்துள்ள புதை பொருள்கள், அவற்றின் தன்மைகள், மொஹஞ்சதாரோ—ஹாரப்பாவில் கண்டெடுத்த புதை பொருள்களோடு ஒத்திருப்பதோடு, சில அம்சங்களில் சிறந்து, அவற்றினும் சிறப்பான நாகரிகத்தை வெளிப்படுத்துகின்றன. மொஹஞ்சதாரோ—ஹாரப்பா நாகரிக மக்கள் இறந்தவர்களைப் பெரிய சால் (பானை) களில் உட்காரும் நிலையில் வைத்து, பிரேதத்தோடு உணவு, நீர், உடை மூன்றும் வைத்துப் புதைக்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். ஆதிச்சநல்லூரிலும் அதே போன்ற பழக்கம் இருந்ததற்கான புதை பொருள்கள் ஆதாரங்களாகக் கிடைத்துள்ளன. ஆகவே ஒரு காலத்தில் இமய முதல் குமரிவரை திராவிடப் பெருங்குடிமக்கள் வாழ்ந்தார்கள் என்பதையும் அவர்கள் உன்னதமான நாகரிகச் சிறப்புப் பெற்றிருந்தனர் என்பதையும் உணரலாம்.

திராவிட இனம் இந்த நாட்டிற்குச் சொந்தமான இனம்; வேறெங்கிருந்தும் இங்கு வந்து குடியேறிய இனமல்ல என்பதற்கு மொழிச் சான்றுகளும் இலக்கியச்சான்றுகளும் நிறைய உண்டு. திராவிடரின் தொன்மொழியாம் கன்னித் தமிழ் மொழியின் அடிப்படை ஓசை அமைப்புகள் இதர தொன்மையான மொழி ஓசைகளில் விரவி நிற்கின்றன. தொல்காப்பியமும் புறநானூற்றுப் பாடல்கள் சிலவும் கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முந்தியவை. தமிழ் இலக்கியங்களில் குளிர்ச்சி விரும்பத்தக்கதாகவும் வெப்பம் வெறுக்கத் தக்கதாகவும் குறிக்கப்படுகிறது. தமிழகத்திலேயே காணப்படுகின்ற யானை, புலி போன்ற மிருகங்களும் — கிளி, மயில் போன்ற பறவைகளும்—தினை, வரகு போன்ற தானியங்களும்- வேங்கை, அகில் போன்ற மரங்களுமே தமிழ் இலக்கியத்தில் காணப்படுகின்றனவே யன்றி, வேற்று நாட்டுப் பொருள்களின் பெயர்களோ, கால நிலையின் சிறப்போ இடம்பெறவில்லை. வேற்று நாடுகளிலிருந்து வந்த இனமாக இருந்திருப்பின் அவரது இலக்கியங்களில் அந்த நாடுகளுக்குரிய பொருள்கள் பற்றிய குறிப்பே இல்லாமல் இருக்க முடியாது. எஸ்கிமோக்களின் இலக்கியங்களில் பனிமலைபற்றியும், அரபு நாட்டு இலக்கியங்களில் பாலைவனச் சூருவளி பற்றியும் குறிப்புகள் இல்லாமலிருக்க முடியுமா? சிந்தித்துப் பார்!

தமிழிலக்கியங்கள் மட்டுமல்ல; பதஞ்சலியின் மகாபாஷ்யமும், காத்யாயனவின் வர்த்திகாவும், அசோகச் சக்ரவர்த்தியின் கல்வெட்டுக்களும், மெகஸ்தனிசின் கட்டுரைகளும் தென்னகத்தில் சிறந்து விளங்கிய பாண்டிய சாம்ராஜ்யம் பற்றிக் குறிப்பிடுகின்றன. கிறிஸ்து சகாப்தம் தோன்றுவதற்கு முன்பே சிறந்து விளங்கிய ஒரு நாகரிகம் இருந்ததற்கு அவை சான்றளிக்கின்றன. துரதிர்ஷ்டவசமாகத் தமிழ் நாட்டின் வரலாற்றினை இலக்கியப் பின்னணியில் ஆராய்ந்து ஆராய்ந்து முறைபட எழுதுவோர் இல்லாமல் போயினர். இத்துறையில் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் தமிழக வரலாற்றினை ஒழுங்குபடுத்தி எழுதிவரும் முயற்சி சிறப்புடைய ஒன்ருகும். தமிழகத்தின் பெருமையை நீயுணர அவை பெரிதும் உதவி செய்யும்.

அந்தக் காலத்திலேயே தமிழன் வெளிநாடுகளில் வியாபார நிறுவனங்கள் நிறுவியிருக்கிருன். சாவகம், புட்பகம், கடாரம் ஆகிய நாடுகளில் தமிழக் கொடிகள் பட்டொளி விசிப் பறந்திருக்கின்றன. இத்தனை பெருமையுடைய தமிழன் நமது முன்னோர்; நமது நாட்டுக்குச் சொந்தக்காரன். நான் சொல்லவில்லை மாதவி; டாக்டர் மக்லீன், டாக்டர் ஹால் போன்ற ஆராய்ச்சியாளர்கள் தமிழகத்தை 'நாகரிகத்தின் தொட்டில்' என்று கூறுகிருர்கள். சரித்திர ஆசிரியா திரு. பி. டி. சீனிவாச ஐயங்கார் காவிரிக்கரை நாகரிகம் மூத்துப் பழுத்த நாகரிகம் எனகிருர். திராவிடர்களிடமிருந்துதான் மனித நாகரிகமே தோன்றியது என்கிருர் டாக்டர் சாட்டர்ஜி! சர். ஜான் ஈவான்ஸ் மனிதனின் தோற்றம் பற்றி பிரிட்டிஷ் ஆராய்ச்சிக் கழகத்தில் ஆற்றிய சொற்பொழிவில், மனித இனத்தின் முதல் தோற்றமே தென்னிந்தியாவில்தான் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று குறிப்பிடுகிருர். விஞ்ஞான ஆராய்ச்சிகளும் தெற்கேதான் மனித இனம் தோன்றியிருக்க வேண்டுமென்று அனுமானிக்கிறது. கிழக்குக் கடற்கரையில் அகப்பட்ட எலும்புக் கூடுகளும் இந்தக் கருத்தையே ஊர்ஜிதம் செய்கின்றன.

மாதவி, காவிரிக்கரை நாகரிகத்தின் பிறப்பிடம் என்பது மட்டுமல்ல; மனித இனமே அங்கேதான் தோன்றியிருக்க வேண்டுமென்பதும் புலனுகிறது. மனித இனம் தோன்றிய பூமியின் சொந்தக்காரர்கள் நாம் என்பதை எண்ணும் போது உள்ளம் குதூகலிக்கிறது; உடல் ஒரு சுற்று பருக்கிறது. சொந்தப் பெருமையைப் பேசிப் பேசி நடைமுறையை மறந்தவர்கள் நாம் என்பதை மறந்துவிடாதே!

எனது அடுத்த கடிதத்தில் வேறு பல புராதன நாகரிகங்களைப் பற்றி எழுதுவேன்.

அதுவரையில் நீ நினைப்பதையெல்லாம் எழுது. எண்ணங்களைப் பரிமாறிக் கொண்டால் தான் தெளிவு பிறக்கும். சிறுமியின் எண்ணங்களில் சிந்தனை ஏது என்பாய்!

ஓடைகள் ஒன்ருகத்தானே பெரிய நதிகள் தோன்றுகின்றன. சிறிய சிந்தனைகள்தான் முடிவில் பெரிதாக வளர்கின்றன. மறந்துவிடாதே!

அன்புள்ள,

அகத்தியன்.